செய்தி வெளியீடு எண்:467 நாள்: **06.07.2020**

## <u>பதிவுத்துறை</u>

## <u>ஆவணப்பதிவிற்கு முன்பதிவு செய்யும் டோக்கன்களை தவறாக பயன்படுத்துவதை தவிர்க்கும் புதிய நடைமுறை</u>

பதிவுத்துறைக்கான ஒருங்கிணைந்த ஆன்–லைன் அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு சராசரியாக நாளொன்றுக்கு பத்தாயிரம் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது ஆவணப்பதிவிற்கு வரும் பொதுமக்கள் ஆவணம் தொடர்பான விபரங்களை இணையவழி அனுப்பி முன்பதிவு டோக்கனை பெற்று சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் சென்று ஆவணம் பதிவு செய்து அன்றன்றே திரும்பி பெறக்கூடிய ஆவணங்களை 70 விழுக்காட்டிற்கு மேல் ஒரே வருகையில் பெற்றுச் செல்கின்றனர். பதிவுக்கு அனுப்பப்படும் ஆவண விபரங்களில் ஏதேனும் தவறுகள் இருப்பின் ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பு வரை பொதுமக்கள் சரி செய்து கொள்ள மென்பொருளில் வசதி உள்ளது. இணையவழி ஓர் ஆவணத்திற்கான விபரங்களை அனுப்பி டோக்கன் பெற்ற பின்பு அந்த டோக்கனை வேறு ஆவணத்திற்கு ஏற்ப ஆவண விபரங்களில் திருத்தம் செய்து இணைய வழி திருத்த இயலாத விபரங்களான ‘‘எழுதி வாங்குபவரின் பெயர் மற்றும் அவரின் உறவுமுறைப் பெயர்’’ ஆகியவற்றை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு நடைபெறும் நாளன்று மாற்றம் செய்து டோக்கனை வேறு நபர்களுக்கு மாற்றும் வாய்ப்பு இது வரை இருந்து வந்தது. இது தவறாக உபயோகப்படுத்தப் படுவதை தவிர்க்கும் பொருட்டு இந்த ஏற்பாடு ஆன்–லைனிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. எனவே, இனிவரும் காலத்தில் ஆவணப்பதிவிற்கு முன்பதிவு செய்து டோக்கன் பெற்ற பின்பு ‘‘எழுதி வாங்குபவரின் பெயர் மற்றும் அவரின் உறவுமுறைப் பெயர் (த/பெ,க/பெ, பிற.,)’’ ஆகியவற்றை பொதுமக்கள் பயன்படுத்தும் இணைய தளத்திலோ அல்லது சார்பதிவாளர் அலுவலகத்திலோ இனி மாற்றம் செய்ய இயலாது. பொதுமக்களின் நலன் கருதி மென்பொருளில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய மாற்றத்தை கருத்தில் கொண்டு டோக்கன் பெறும் முன்னர் ஆவண விபரங்களை இணைய வழி அனுப்பும் போது ஒரு முறைக்கு இரு முறை தெளிவாக சரி பார்த்த பின்பு அனுப்பி வைக்குமாறு பதிவுக்கு வரும் பொது மக்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இதில் பொதுமக்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருப்பின் பதிவுத்துறைத் தலைவர் அலுவலக கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 102 5174–ஐ தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

Verified RealEstate